நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 41/2020**

அ.சா.1 (LW – 1) சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துலட்சுமி | க/பெ. | : | பழனிசாமி |
| கிராமம் | : | சென்னிமலை | வட்டம் | : | பெருந்துறை |
| தொழில் | : | நெசவு வேலை | வயது | : | 63 |

18–11–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 5ம் எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் சென்னிமலையில் குடியிருந்து வருகிறேன். நான் நெசவு வேலை செய்து வருகிறேன். 2019ம் வருடம் நான் சென்னிமலை MSK நகரில் குடியிருந்து வந்தேன். எனது கணவர் பெயர் பழனிசாமி. எனது மாமனார் பெயர் செல்லப்பகவுண்டர். எனக்கு ஒரு மகள் உள்ளார். அவர் பெயர் கோகிலவாணி. எனது கணவர் பழனிசாமி ஈரோட்டில் உள்ள TNSTCயில் நடத்துனராக பணியாற்றி வந்தார். நானும், எனது கணவரும் சேர்ந்து வாழாமல் கடைசியாக 12 ஆண்டு காலங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தோம். எனது மகள் கோகிலவாணி என்னுடன் தான் வாழ்ந்துவந்தார். எனது மகள் திருமணமாகி 2019ம் வருடம் சிங்கப்பூரில் வசித்து வந்தார். 2019ம் வருடம் எனது கணவர் சென்னிமலை பக்கத்தில் உள்ள 1010 காலனியில் குடியிருந்து வந்தார். 2017ம் வருடம் வாக்கில் எனது கணவர் பணி ஓய்வு பெற்றுவிட்டார். 2019ம் வருடம் எனது கணவர் வேறு வேலைக்கு எதுவும் செல்லாமல் வீட்டில் தான் இருந்து வந்தார். எனது கணவருக்கு காந்திமதி என்ற ஒரு சகோதரியும் மற்றும் சண்முகம் என்ற ஒரு சகோதரனும் உள்ளார்கள். காந்திமதியின் கணவர் பெயர் பெரியசாமி. 13–08–2019ம் தேதியில் காலை 8 மணியளவில் நான் MSK நகரில் உள்ள எனது வீட்டில் இருந்த போது எனது கொழுந்தியா கணவர் பெரியசாமி எனக்கு போன் செய்து 1010 காலனியில் உள்ள வீட்டில் எனது கணவர் பழனிசாமியை அடித்து கொலை பன்னிவிட்டார்கள் என்று சொன்னார். அதன்பிறகு நான் 1010

காலனியில் உள்ள எனது கணவர் வீட்டிற்கு சென்றேன். வீட்டின் முன்பக்க கதவு சாத்தப்பட்டு இருந்தது. வீட்டின் பின்பக்க கதவு திறந்து கிடந்தது. உடல் முழுவதும் காயங்களுடன் கை, கால்கள் சாக்கு சரடால் கட்டப்பட்டு, வாய் துணி வைத்து கட்டப்பட்டு எனது கணவர் இறந்துபோய் வீட்டின் ஹாலில் கிடந்தார். பிரேதத்தின் தலை வடக்கு பக்கமும், கால் தெற்கு பக்கமும் பார்த்ததாக இருந்தது. பிரேதம் ஒருபக்கம் சாய்ந்தது போல் கிடந்தது. அதன் பிறகு சென்னிமலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரில் எனது கையொப்பம் உள்ளது. நான் கொடுத்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தார்கள். மோப்பநாய் அழைத்து வந்தார்கள். எனது கணவரின் பிரேதத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டினேன். போலீசார் பிரேதத்தின் மீது இருந்து காயங்களை எல்லாம் பார்த்தார்கள். போஸ்மார்டம் செய்வதற்காக எனது கணவரின் பிரேதத்தை போலீசார் கோயம்புத்தூருக்கு எடுத்து சென்று விட்டார்கள். மறுநாள் போஸ்மார்டம் செய்து எனது கொழுந்தனார் சண்முகத்திடம் பிரேதத்தை ஒப்படைத்துவிட்டார்கள். பிரேதத்தை நல்லடக்கம் செய்துவிட்டோம். பாலாஜி, மகேந்திரன், பூபதி, ஆறுச்சாமி, முத்துகுமார் ஆகியோர்கள் அடித்து கொன்றுவிட்டதாக எனது கொழுந்தியா கணவர் பெரியசாமி என்னிடம் சொன்னார். 3வது எதிரி ஆறுச்சாமி ஆட்டோ டிரைவர். 3வது எதிரி ஆறுச்சாமி தான் எனது கணவருக்கு டிரைவர். பணத்தை கொள்ளையடிப்பதற்காக 3வது எதிரி ஆறுச்சாமி அய்டியா கொடுத்து எதிரிகள் பாலாஜி, மகேந்திரன், பூபதி, முத்துகுமார் ஆகியோர்கள் சேர்ந்து கொலை செய்துள்ளார்கள் என்று கேள்விப்பட்டேன். எதிரிகள் பாலாஜி, பூபதி, மகேந்திரன், ஆறுச்சாமி, முத்து (எ) முத்துகுமார் ஆகியோர்களை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் பார்த்தேன். எதிரிகள் 4 நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் உள்ளார்கள். போலீசார் என்னை 2 முறை விசாரித்தார்கள். கடைசியாக 21-08-2019ம் தேதியில் போலீசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எனது கணவர் தவறான முறையில் நடந்து கொண்டதால் நானும், எனது கணவரும் 12 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வந்தோம். எனது கணவர் பெண்கள் விசயத்தில் தவறாக நடந்து கொண்டாரா, எனது கணவர் மது அருந்தும் வகையில் தவறாக நடந்து கொண்டாரா என்றால் எனது கணவர் பெண்கள் விசயத்திலும், மது அருந்துவதிலும் தவறான முறையில் நடந்து கொண்டார். எனது கணவர் எங்கு சென்று வருவார் என்பது குறித்தும், எனது கணவர் யாருடன் பழகிவந்தார் என்பது குறித்தும் நான் அவருடன் சேர்ந்து வாழ்ந்து வந்த காலகட்டத்திலும்

மற்றும் நான் அவருடன் பிரிந்து வாழ்ந்த காலகட்டத்திலும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும், எனது மகள் கோகிலவாணிக்கும் எனது கணவர் பண உதவியோ அல்லது பொருள் உதவியோ செய்தது கிடையாது என்றால் சரிதான். எனது கணவர் சம்பளம் வாங்கிய காலகட்டத்திலும், எனக்கும் எனது மகளுக்கும் எனது கணவர் ஒரு பைசா கூட பணம் கொடுத்ததில்லை என்றால் சரிதான். எனது கணவர் பணி ஓய்வு பெற்றப்பின்பு அவர் மொத்தமாக பணி ஓய்வு பலன்களை பெற்றதை அதில் இருந்து ஒரு பைசா பணம் கூட எனக்கும், எனது மகளுக்கும் கொடுத்ததில்லை என்றால் சரிதான். பெரியசாமி எந்த நேரத்தில் எந்த செல்போனில் இருந்து என்னை அழைத்தார் என்றால் பெரியசாமி அவரது செல்போன் எண்ணில் இருந்து தான் என்னை அழைத்தார், அவரது செல்போன் எண் தற்போது எனக்கு தெரியாது, அவர் காலை 8 மணியளவில் எனக்கு போன் செய்தார். நான் குடியிருந்து வந்த MSK நகருக்கும், எனது கணவர் குடியிருந்து வந்த பிடாரியூர், 1010 காலனிக்கும் இடையே சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். அன்றைய தினம் காலை 8.30 மணியளவில் எனது கணவர் குடியிருந்து வந்த 1010 காலனியில் உள்ள வீட்டிற்கு சென்றேன். நான் அவ்வாறு எனது கணவர் வீட்டிற்கு செல்வதற்கு முன்பு அங்கு யார்யார் இருந்தார்கள் என்றால் பெரியசாமி, சண்முகம் மற்றும் பக்கத்து வீட்டுக்காரர்கள் நிறைய பேர் இருந்தார்கள். எனது கணவரின் உடலில் எந்தெந்த இடத்தில் காயங்கள் இருந்தது என்று குறிப்பாக சொல்லமுடியுமா என்றால் வலது பக்க நெற்றிப்பொட்டில் காயம் இருந்தது, கை, கால்களில் காயங்கள் இருந்தது, கால்கள் மற்றும் கைகள் கட்டப்பட்டிருந்தது. சம்பவ இடத்தில் வைத்து புகார் எழுதிக்கொடுத்தேனா அல்லது காவல் நிலையம் சென்று புகார் எழுதிக்கொடுத்தேனா என்றால் காவல் நிலையம் சென்று புகார் எழுதிக்கொடுத்தேன். நான் காவல் நிலையம் சென்றபோது காலை சுமார் 9 மணி இருக்கும். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதினார்கள் என்றால் என்னுடன் வந்தவர் எழுதினார், அவர் பெயர் தெரியவில்லை. விவரங்களை அவர் எழுதி என்னிடம் கையெழுத்து கேட்டடதில் நான் கையெழுத்து போட்டு போலீசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் சொல்லி தான் புகாரில் உள்ள வாசகங்களை அவர் எழுதினார். யாரோ ஏதோ காரணத்திற்காக எனது கணவரை கொலை செய்துவிட்டதாக புகாரில் கடைசி 4 வரிகளில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் தவறான பெண்களுடன் தொடர்பு வைத்து கொள்வதில் எனது வீட்டில் இருந்தால் தொந்தரவாக இருக்கும் என்பதால் அவர் 1010 காலனியில் தனியாக வசித்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் தவறான பெண்களுடன் தொடர்பில் இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். 12-08-2019ம் தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்பு திருநெல்வேலியை சேர்ந்த 30 வயதுடைய நாடார் சமுதாயத்தை சேர்ந்த ஒரு பெண்மணியை

எனது கணவர் திருமணம் செய்து கொண்டு 1010 காலனியில் வசித்து வந்ததாக கேள்விப்பட்டேனா என்றால் கேள்விப்பட்டேன். 13-08-2019ம் தேதியில் நான் எனது கணவரின் வீட்டிற்கு சென்ற போது அந்த பெண் வீட்டில் இல்லை என்றால் சரிதான். திருநெல்வேலியை சேர்ந்த அந்த பெண்ணை எனது கணவர் திருமணம் செய்தது குறித்தும், அந்த பெண் மீது சந்தேகம் இருப்பதாகவும் எனது புகாரில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 13-08-2019ம் தேதியில் எனது கணவரின் வீட்டில் முன்பக்க கதவு தாள் போட்டிருந்ததால் பின் பக்க கதவு திறந்திருந்ததால் பின்பக்க கதவு வழியாக நான் சென்றேன் என்றால் சரிதான். எனது கணவரின் வீட்டிற்குள் நான் செல்வதற்கு முன்பு வேறு யாரும் வீட்டிற்குள் செல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் பிரேதத்தை வீட்டில் இருந்து எடுத்து சென்றபிறகு அங்கு தங்க நகைகள், வெள்ளி நகைகள் மற்றும் பணம் இருந்ததா என்றால் அவைகள் எதுவும் அங்கு இல்லை. அன்றைய தினம் எனது கணவரின் வீட்டின் பின்பக்க கதவை உடைக்கப்படாமல் திறந்துகொண்டு தான் சென்றேன் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் எனது கணவர் வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்படாமல் தாள்போட்டு இருந்தது என்றால் சரிதான். எனது கணவரின் பக்கத்து வீட்டுக்காரர்கள் யாரும் 12-08-2019ம் தேதி இரவில் எனது கணவர் சத்தம்போட்டதாக என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. எனது கணவரின் பிரேதம் கிடந்த இடத்திற்கு அருகில் மது பாட்டில்கள் இருந்ததா என்றால் அதை எல்லாம் நான் பார்க்கவில்லை. எனது கணவர் திருநெல்வேலியை சேர்ந்த ஒரு பெண்ணை திருமணம் செய்திருந்தார் என்ற விபரத்தை போலீசாரிடம் நான் இன்றைய தேதி வரை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் இறந்து போனதற்கு நானும் ஒரு காரணமாக இருப்பேன் என்று போலீசார் என்மீது வழக்கு போடுவார்கள் என்று பயந்து கொண்டு போலீசார் கேட்டதால் புகாரில் கையொப்பம் மட்டும் போட்டு கொடுத்தேன் என்றால் தவறு. திருநெல்வேலியை சேர்ந்த அந்த பெண் தான் நகைகள் மற்றும் பணத்திற்கு ஆசைப்பட்டு எனது கணவருக்கு அதிக மது கொடுத்து அவர் மது போதையில் இருந்த போது அவரை கொன்றுவிட்டு நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து சென்றுவிட்டார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சரியாக துப்புக்கொடுக்காததால் போலீசார் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள் என்றால் நான் கேள்விப்பட்டதை போலீசாரிடம் சொல்லிவிட்டேன். போலீசார் காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை அடையாளம் காட்டி அவர்கள் தான் எனது கணவரை கொன்றுவிட்டார்கள் என்று சொன்னபோது தான் எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகளை போலீசார் அடையாளம் காட்டுவதற்கு முன்பு அவர்களை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். எதிரிகள்

சென்னிமலை ஆட்டோ ஸ்டேண்டில் உள்ள சாதாரண டிரைவர்கள் என்றும், எனது கணவர் மது போதையில் இருக்கும் போது அவர் கேட்டுக்கொள்ளும்போது அவரை ஆட்டோவில் ஏற்றி எதிரிகள் வீட்டில் கொண்டுபோய்விடுவார்கள் என்றும், எனது கணவரை கொலை செய்யும் அளவிற்கு எதிரிகளுக்கு எவ்வித செல்வாக்கும், காரணமும் இல்லை என்றும் சொன்னால் தவறு. எனது கணவரின் கொலைக்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் தவறு.

2 , 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது கணவருக்கு பல பெண்களுடன் தொர்பு இருந்ததால் எனது கணவருக்கு பல நபர்களுடன் விரோதம் இருந்து வந்து என்றால் அது எனக்கு தெரியாது. எனது மகளுக்கு விபரம் தெரிந்த பிறகு எனக்கும், எனது கணவருக்கும் இடையே என்ன பிரச்சனை என்று என்னிடம் கேட்டுள்ளாரா என்றால் எனது மகளுக்கு விபரம் தெரிந்த பிறகு என்ன நடந்தது என்று அவருக்கும் தெரியும். என்னையும், எனது கணவரையும் சேர்த்து வைப்பதற்கு எனது மகள் ஏதாவது முயற்சி எடுத்தாரா என்றால் இல்லை. எனது கணவருக்கு தவறான பெண்கள் சாவகாசம் மற்றும் இதர தவறான நடவடிக்கைகள் இருந்ததால் தான் என்னையும், எனது கணவரையும் சேர்த்து வைக்க எனது மகள் முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் தவறான பழக்கவழக்கங்களை திருத்த நானோ, எனது மகளோ, எனது சொங்கக்காரர்களோ முயற்சித்தோமா என்றால் முயற்சித்தோம். அவ்வாறு என்ன நடவடிக்கைகள் எடுத்தோம் என்றால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவரிடம் நியாயம் பேசினோம். அவ்வாறு பேசியதில் எனது கணவரின் தவறான நடவடிக்கைகள் மாறவில்லை. அவ்வாறு நியாயம் பேசியதேல்லாம் நாங்கள் இருவரும் பிரிவதற்கு முன்பே நடந்தவைகள் ஆகும். நானும், எனது கணவரும் பிரிந்த பிறகும் அவரது நடவடிக்கைகளை நான் கேள்விப்பட்டு வந்தேன் என்றால் சரிதான். எதிரிகளின் பெயரையும், எனது கணவரின் பெயரையும் இணைத்து எப்போதாவது நான் கேள்விப்பட்டிருக்கிறேன் என்றால் கேள்விப்படவில்லை. எனது கணவர் தனியாக வசித்து வந்தபோது அவரது தவறான பழக்கங்கள் அதிகமாகிக்கொண்டே இருந்தது என்றால் சரிதான். எனது செல்போனின் அழைப்பு தகவல்களை என்னிடம் போலீசார் சேகரித்தார்களா என்றால் இல்லை. எந்த செல்போன் நெம்பரில் இருந்த எனக்கு அன்றைய தினம் அழைப்பு வந்தது என்று போலீசார் கேட்டார்களா என்றால் இல்லை. நானும், எனது கணவரும் பிரிவதற்கு 4 வருடங்களுக்கு முன்பு நான் காங்கயம் மகளிர் காவல் நிலையத்தில் எனது கணவர் மீது புகார் கொடுத்திருந்தேன். எனது கணவர் மது அருந்திவிட்டு வீட்டில் பிரச்சனை செய்து அடிதடி செய்கிறார் என்று புகார்

கொடுத்தேன். 12-08-2019ம் தேதியில் எனது கணவரை கொலை செய்யப்பட்டதாக காவல் துறையினர் சொல்லிதான் எனது புகாரில் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை, நான் சொல்லிதான் புகாரில் எழுதப்பட்டது. 12-08-2019ம் தேதியில் தான் எனது கணவர் கொலை செய்யப்பட்டார் என்ற விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அது எனக்கு தெரியாது. எனது கணவர் மீது எவ்வித பற்றுதலும் எனக்கு கிடையாது என்றும், காவல் துறையினரின் வற்புறுத்தலின் பேரில் பெயரளவில் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் தவறு.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2, 4 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 3ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 5ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 41/2020**

அ.சா.2 (LW –2 ) சாட்சியின் சான்றுரை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பெரியசாமி | த/பெ. | : | சுப்ரமணி |
| கிராமம் | : | ஜீவா நகர், சென்னிமலை | வட்டம் | : | பெருந்துறை |
| தொழில் | : | ஜவுளி வியாபாரம் | வயது | : | 62 |

18–11–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 5ம் எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் சென்னிமலை, ஈங்கூர் ரோடு, ஜீவா நகரில் வசித்து வருகிறேன். நான் ஜவுளி வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா. 1 முத்துலட்சுமி எனது மைத்துனரின் மனைவி ஆவார். எனது மைத்துனர் பெயர் பழனிசாமி. எனது மனைவி பெயர் காந்திமதி. எனது மைத்துனர் பழனிசாமிக்கு ஒரு பெண் குழந்தை. அவர் பெயர் கோகிலவாணி. கோகிலவாணி சிங்கப்பூரில் வசித்து வருகிறார். எனது மைத்துனர் பழனிசாமி அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக பேலை பார்த்து வந்தார். அ.சா.1 முத்துலட்சுமியும், பழனிசாமியும் தனித்தனியாக சுமார் 12 வருட காலங்களாக பிரிந்த வாழ்ந்து வந்தார்கள். 2019ம் வருடம் அ.சா.1 முத்துலட்சுமி MSK நகரில் தனியாக குடியிருந்து வந்தார். 2019ம் வருடம் எனது மைத்துனர் பழனிசாமி பிடாயூர், 1010 காலனியில் குடியிருந்து வந்தார். 2019ம் வருடத்திற்கு முன்பே பழனிசாமி பணியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார். 13–08–2019ம் தேதியில் காலை சுமார் 7.45 மணிக்கு நான் எனது வீட்டில் இருந்தபோது யாரோ ஒரு நபர் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பழனிசாமி அவரது வீட்டில் செத்துகிடக்கிறார் என்று சொன்னார். நான் உடனே புறப்பட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். பழனிசாமி வீட்டின் முன்பக்க கதவு தாள் போட்டிருந்தது. பழனிசாமி வீட்டின் பின்பக்க கதவு அருகே சென்றபோது பாதி அளவு திறந்திருந்தது, நான் வீட்டிற்குள் செல்லவில்லை. பழனிசாமி இறந்துபோன நிலையில் கைகள் கட்டப்பட்டு, வாய்

துண்டால் கட்டப்பட்டு, தலையில் இரத்தம் வந்த நிலையில், கால்கள் கட்டப்பட்டு இருந்தது. பழனிசாமியின் பிரேதம் ஒருபக்க வாக்கில் படுத்திருந்தது. நான் உடனே அ.சா.1 முத்துலட்சுமிக்கு போன் மூலம் தகவல் சொல்லி அவரை வரவழைத்தேன். அ.சா.1 முத்துலட்சுமி சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தார், அதன் பிறகு அ.சா.1 முத்துலட்சுமி சென்னிமலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள். பிரேதத்தை அங்கிருந்தவர்களிடம் போலீசார் அடையாளம் கேட்டார்கள். பிரேதத்தை போலீசார் போஸ்மார்டம் செய்வதற்காக கோயம்புத்தூருக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். பழனிசாமி ரிட்டேர்மெண்ட் பணங்களை வைத்திருந்ததில் அவரது நண்பர்களால் கொலை நடந்திருக்கலாம் என்று கேள்விப்பட்டேன். பழனிசாமியின் நண்பர்கள் யார் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

முத்துலட்சுமியை பிரிந்த பின்பு 1010 காலனியில் வீட்டில் குடியிருப்பதற்கு முன்பு பழனிசாமி எனது வீட்டில் சிறிது காலம் குடியிருந்தார் என்றால் இல்லை. அ.சா.1 முத்துலட்சுமியின் மகள் கோகிலவாணியின் திருமணத்தை கூட பழனிசாமி முன்நின்று நடத்தவில்லை என்றால் சரிதான். முத்துலட்சுமியுடன் வாழ்ந்த காலகட்டத்தில் பழனிசாமி பல பெண்களுடன் தவறான சவகாசம் வைத்திருந்தார் என்றால் அவைகள் பற்றி எனக்கு தெரியாது. பழனிசாமி அடிபட்டு இறந்துபோய் கிடப்பதாக தான் எனக்கு செல்போனில் தகவல் வந்தது. பின்வாசல் கதவு வழியாக பழனிசாமி இறந்துபோய் கிடந்ததை பார்க்க முடியாது என்றால் இல்லை பார்த்தேன். பின்வாசல் அடுத்து ஒரு பாத்ரூம், ஒரு டாய்லெட் உள்ள நிலையில் அதற்கு அடுத்து ஹால் உள்ள நிலையில் அந்த ஹாலில் உள்பக்கம் வலது பக்கத்தில் பிரேதம் கிடந்துள்ள நிலையில் வீட்டின் பின்பக்க கதவு வழியாக பார்த்தால் தெரியாது என்றால் இல்லை, பிரேதம் கிடந்தது தெரிந்தது. நான் சம்பவ இடம் சென்றபோது சுமார் 15 நபர்கள் அங்கு இருந்தார்கள். 108 ஆம்புலன்ஸிற்கு நான் செல்போன் மூலம் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். 100 அவசர அழைப்பு எண்ணிற்கு நான் செல்போன் மூலம் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். சென்னிமலை போலீசார் காலை சுமார் 9.15 மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மலையம்பாளையம் பொறுப்பு காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார். அ.சா.1 முத்துலட்சுமி காவல் நிலையம் சென்றபோது நான் மற்றும் எனது உறவினர்கள் 5, 6 நபர்கள் உடன் சென்றோம். அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் ஸ்டேசனுக்கு முன்னால் நின்றுகொண்டிருந்தேன். நான் காவல்

நிலையம் சென்றபோது என்ன நேரம் இருக்கும் என்றால் காலை சுமார் 9 மணி இருக்கும். காவல் நிலையத்தில் வைத்து அ.சா.1 முத்துலட்சுமியிடம் எத்தனை கையெழுத்துக்கள் வாங்கினார்கள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. சம்பவம் நடந்த வீட்டிற்கு வெளியே வைத்து காலை சுமார் 11 மணியளவில் போலீசார் என்னை விசாரித்தார்கள். 12-08-2019ம் தேதிக்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு திருநெல்வேலியை சேர்ந்த நாடார் வகுப்பை சேர்ந்த சுமார் 30 வயதுள்ள ஒரு பெண்மணியை பழனிசாமி திருமணம் செய்து 1010 காலனியில் அவருடன் குடியிருந்து வந்ததாக கேள்விப்பட்டேனா என்றால் இல்லை. வழக்கின் ஆஜர் எதிரிகள் பழனிசாமியின் நண்பர்களா அல்லது எதிரிகளா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். பழனிசாமி இறக்கும்போது அவருக்கு வயது சுமார் 60 இருக்கும். பணத்திற்காக பழனிசாமியின் நண்பர்கள் அவரை கொலை செய்துவிட்டதாக நான் கேள்விப்பட்டதாக சொல்வது சுத்த பொய் என்றும், அந்த திருநெல்வேலியை சேர்ந்த 30 வயதுடைய பெண்மணி பழனிசாமிக்கு அதிக மது கொடுத்து அவர் மது போதையில் இருந்த போது அவரை கொன்றுவிட்டு நகைகள் மற்றும் பணம் ஆகியவைகளை கொள்ளையடித்து கொண்டு பின்வாசல் வழியாக சென்றுவிட்டார் என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது. சரியான புகார் கொடுக்கப்படாததால் எதிரிகள் மீது சந்தேகத்தின் பேரில் வழக்கு போடப்பட்டுவிட்டது என்றும், பழனிசாமியின் சபலபுத்தியால் அவரது பணம் மற்றும் நகைகள் கொள்ளையடிக்கப்பட்டு அவர் கொலை செய்யப்பட்டார் என்றும், எதிரிகளுக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றும் சொன்னால் தவறு. பழனிசாமி இறந்துபோனதற்கு சுமார் 6 மாதத்திற்கு முன்பு கடைசியாக அவரை நான் நேரில் பார்த்தேன். பழனிசாமி அடிக்கடி எனது வீட்டிற்கு வந்துசெல்வாரா என்றால் விஷேசங்களுக்கு அழைத்தால் அவர் எனது வீட்டிற்கு வந்துசெல்வார்.

<u>2, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

பழனிசாமியின் நடவடிக்கைகளை நான் கேள்விப்பட்டு வந்தேன் என்றால் சில நடவடிக்கைகளை நான் கேள்விப்படுவேன், பெரும்பாலும் நான் உண்டு, எனது வேலையுண்டு என்று இருப்பேன். பழனிசாமி இறந்துபோன சமயத்தில் அவரது ரிட்டேர்மெண்ட் பணங்கள் இருந்தது என்று எந்த அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் கேள்விப்பட்ட வகையில் சொன்னேன், எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவம் நடந்தற்கு முன்பு எத்தனை வருடங்களுக்கு முன்பு பழனிசாமி பணி ஓய்வு பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. பணம் வைத்திருந்ததாக சொல்வது நான் அனுமானத்தின் அடிப்படையில் சொல்லியவைகள் என்றும், பணம் வைத்திருந்ததாக நான் எதுவும் கேள்விப்படவில்லை என்றும் சொன்னால் தவறு.

செல்போனில் பேசிய ஒரு நபர் தான் பழனிசாமி இறந்துபோன விபரத்தை என்னிடம் சொன்னார். உறவினர்கள் எல்லாம் செல்போன் மூலம் பழனிசாமிக்கு என்னவானது என்று கேட்டார்கள். பழனிசாமி இறந்துபோன விபரம் எனக்கு செல்போன் மூலம் தகவல் கிடைக்கவில்லை என்றும், அவ்வாறு செல்போன் மூலம் தகவல் கிடைத்திருந்தால் அந்த தகவலை யார் சொன்னார்கள் என்ற விபரத்தை நான் சொல்லியிருப்பேன் என்றும் சொன்னால் தவறு. இந்த வழக்கில் எனக்கு பெரிய அளவில் ஆர்வம் இல்லை என்றும், காவல் துறையினர் வற்புறுத்தலின் பேரில் தான் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் சொன்னால் தவறு.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2, 4 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 3ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 5ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது.

<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.

நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
II கூடுதல் அமர்வு நீதிமன்றம், ஈரோடு.
**S.C.No. 41/2020**

<u>அ.சா.3 (LW – 3 ) சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கே.சி.சண்முகம் | த/பெ. | : | செல்லப்பகவுண்டர் |
| கிராமம் | : | கோவக்காடு, சென்னிமலை | வட்டம் | : | பெருந்துறை |
| தொழில் | : | பழைய அட்டை வியாபாரம் | வயது | : | 58 |

<u>18–11–2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.</u>

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 5ம் எதிரி ஆஜரில்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u> (சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்).

நான் சென்னிமலை, கோவக்காடு, கண்ணகி வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் பழைய அட்டை வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 முத்துலட்சுமி எனது அண்ணன் மனைவி. எனது அண்ணன் பெயர் பழனிசாமி. எனது அண்ணன் பழனிசாமி அரசு போக்குவரத்து கழகத்தில் கன்டெக்டராக வேலை பார்த்து வந்தார். எனது அண்ணனுக்கு கோகிலவாணி என்ற ஒரே பெண் உள்ளார். கோகிலவாணிக்கு திருமணமாகி அவர் சிங்கப்பூரில் உள்ளார். சுமார் 2017ம் வருடம் எனது அண்ணன் பழனிசாமி பணி ஓய்வு பெற்றுவிட்டார். எனது அண்ணன் பழனிசாமி 10 வருடங்களுக்கு மேல் தனது மனைவி மற்றும் மகளை பிரிந்து வாழ்ந்து வந்தார். அ.சா.1 முத்துலட்சுமி MSK நகரில் மகளுடன் தனியாக வசித்து வந்தார். எனது அண்ணன் பழனிசாமி பிடாரியூர் 1010 காலனியில் தனியாக வசித்து வந்தார். 13–08–2019ம் தேதியில் காலை சுமார் 7.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது அண்ணன் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் EBல் வேலை பார்த்த ஒருவர் செல்போனில் என்னை தொடர்பு கொண்டு எனது அண்ணன் பழனிசாமி கை,கால்கள் எல்லாம் கட்டப்பட்ட நிலையில் வீட்டில் இருப்பதாகவும், உயிர் இருக்கிறதா, இல்லையா என்று சொன்னார். நான் உடனே எனது அக்கா மகன் சேகரை அழைத்துக்கொண்டு பழனிசாமி வீட்டிற்கு சென்றேன். எனது அண்ணன் பழனிசாமியின் வீட்டின் முன்பக்க கதவு தாள்போட்டிருந்தது, அதனால் வீட்டின் பின்வழியாக

சென்று பார்த்த போது பின்பக்க கதவு முழுவதுமாக நீக்கியிருந்தது. நான் வீட்டிற்குள் ஒரு கால் வைத்து எட்டிப்பார்த்தேன். எனது அண்ணன் பழனிசாமியின் முகத்தில் எல்லாம் இரத்தம் வழிந்த நிலையில் கைகள், கால்கள் கட்டப்பட்டும், வாயில் துண்டு சுத்தப்பட்டும் ஒருபக்கம் படுத்தார்போல் இறந்துபோய் கிடந்தார். எனது மைத்துனர் பெரியசாமி எனது அண்ணன் மனைவி முத்துலட்சுமிக்கு தகவல் சொன்னார். அதன்பிறகு முத்துலட்சுமி சம்பவ இடத்திற்கு வந்தார். எனது அண்ணி முத்துலட்சுமி சென்னிமலை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். அதன்பிறகு மலையம்பாளையம் காவல் ஆய்வாளர் போலீசாருடன் அங்கு வந்தார். பிரேதத்தை அடையாளம் காட்ட சொன்னார்கள், நான், எனது அண்ணி முத்துலட்சமி, எனது அக்கா ஆகியோர்கள் பிரேதத்தை அடையாளம் காட்டினோம். போலீசார் பிரேதத்தின் மீது இருந்த காயங்களை பார்த்தார்கள். வீட்டில் உள்ள துணிகள் எல்லாம் இறைந்து கிடந்தது, பீரோ எல்லாம் உடைக்கப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனை செய்தவற்காக போலீசார் பிரேதத்தை கோயம்புத்தூருக்கு எடுத்து சென்றுவிட்டார்கள். வழக்கின் எதிரிகள் தான் பழனிசாமியை கொலை செய்ததாக போலீசார் சொன்னார்கள். நான் வேறு எதுவும் கேள்விப்படவில்லை. எதிரிகள் பாலாஜி, பூபதி, ஆறுச்சாமி, மற்றும் ஒருவர் ஆகியோர்கள் தான் கொலை செய்ததாக போலீசார் சொன்னார்கள். திரும்ப முத்து என்பவரும் சேர்ந்து கொலை செய்ததாக போலீசார் சொன்னார்கள். அந்த முத்து என்பவரிடம் தான் செல்போனை பரிமுதல் செய்ததாக போலீசார் என்னிடம் சொன்னார்கள். 17-09-2019ம் தேதியில் போலீசார் செல்போனை காட்டி இது யாருடையது என்று என்னிடம் கேட்டார், நான் இந்த செல்போன் எனது அண்ணனுடையது என்று சொன்னேன். எனது அண்ணன் இறந்த இடத்தில் வைத்து போலீசார் என்னை ஒரு முறை விசாரித்தார்கள், அதன்பிறகு காவல் நிலையத்தில் வைத்து என்னை ஒரு முறை போலீசார் என்னை விசாரித்தார்கள், அதன் பிறகு முத்து என்பவரை கைது செய்த பிறகு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

என்ன காரணங்களுக்காக முத்துலட்சுமியும், பழனிசாமியும் பிரிந்து இருந்தார்கள் என்றால் பழனிசாமி டியூட்டிக்கு சென்றுவிட்டு வந்து மது அருந்திவிட்டு தூங்கிக்கொண்டு இருப்பார், அவரை எழுப்பினால் கோபமாகி அடிப்பார், வீட்டிற்கு செலவிற்கு பணம் கொடுக்கமாட்டார், உறவினர்களுக்கு பணம் செலவு செய்யமாட்டார், இடம் ஒன்னு வாங்கியதில் தகராறு ஏற்பட்டதில் அதனை பழனிசாமி வீட்டிற்கு சொல்லாமல்விட்டுவிட்டார் ஆகிய பிரச்சனைகளினால் பிரிந்துவிட்டனர். எனது அண்ணனுக்கு பல பெண்களுடன் தவறான தொடர்பு இருந்ததால் எனது அண்ணனுக்கும், அண்ணிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு

பிரிந்துபோய்விட்டார்கள் என்றால் 15 வருடங்களுக்கு முன்பு எனது அண்ணனுக்கு ஒரு பெண்ணுடன் பழக்கம் இருந்தது, அது என்னமாதிரியான பழக்கம் என்று எனக்கு தெரியாது. எனது அண்ணன் குடியிருந்து வந்த 1010 காலனியில் உள்ள வீட்டிற்கும், கண்ணகி வீதியில் உள்ள எனது வீட்டிற்கும் இடையே சுமார் 2-1/2 கி.மீ. தூரம் இருக்கும். கடைசியாக எனது அண்ணன் இறப்பதற்கு சுமார் 5 நாட்களுக்கு முன்பு அவர் எனது வீட்டிற்கு வந்தார். எனது அண்ணன் இறந்ததற்கு ஒரு மாதத்திற்கு முன்பு திருநெல்வேலியை சேர்ந்த 30 வயது மதிக்கதக்க நாடார் சமுதாயத்தை சேர்ந்த ஒரு பெண்மணியை எனது அண்ணன் திருமணம் செய்து அவருடன் வீட்டில் வசித்து வந்தார் என்று கேள்விப்பட்டேனா என்றால் கேள்விப்பட்டேன், கேள்விப்பட்ட பிறகு எனது அண்ணனின் வீட்டிற்கு நான் சென்ற பார்த்தேன். வீட்டில் பெண்மணி யாரும் இல்லை. வீட்டில் எனது அண்ணன் ஒரு பெண்மணியுடன் வசித்து வந்ததற்கான அடையாளம் எதுவும் இல்லை. நான் கேள்விப்பட்டது குறித்து எனது அண்ணனிடம் எதுவும் கேட்கவில்லை. நான் எனது அண்ணனின் வீட்டிற்குள் சென்று பார்த்தேனா என்றால் நான் முழுவதுமாக வீட்டிற்குள் செல்லவில்லை. வீட்டின் வெளியில் இருந்துகொண்டு பார்த்தால் வீட்டிற்குள் இருந்த பிரேதம் தெரியாது என்றால் தவறு. நான் வெளியே நின்றுகொண்டு பிரேதத்தை பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. அந்த வீட்டில் உள்ள ஹால் 10க்கு 10 அடி அளவு கொண்ட ஹால் ஆகும். வெளியில் இருந்து பார்த்தாலே தெரியும். எனது அண்ணி முத்துலட்சுமி காலை சுமார் 7.45 முதல் 8 மணியளவில் எனது அண்ணனின் வீட்டிற்கு வந்திருப்பார். நான் எனது அண்ணன் வீட்டிற்கு சென்ற சமயத்தில் அங்கு யார்யார் இருந்தார்கள் என்றால் அந்த பகுதியை சேர்ந்த 15 நபர்கள் இருந்தார்கள். உறவுக்காரர்களில் நான் தான் முதலில் எனது அண்ணன் வீட்டிற்கு சென்றேன், மற்ற உறவினர்கள் எல்லாம் நான் சென்ற பிறகு தான் வந்தார்கள். நான் 108 ஆம்புலன்ஸிற்கு செல்போன் மூலம் தகவல் சொல்லவில்லை. நான் 100 அவசர அழைப்பிற்கு செல்போன் மூலம் தகவல் சொல்லவில்லை. பிரேதத்தை போலீசார் விசாரணை செய்த போது நிறைய நபர்கள் உடன் இருந்தார்கள், யார் யார் என்று குறிப்பாக தெரியவில்லை. என்னிடம் காட்டப்பட்ட செல்போனை போலீசார் யாரிடமிருந்து எடுத்தார்கள் என்ற விபரம் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது தாயார் பெயர் சுப்புலட்சுமி. திருநெல்வேலியை சேர்ந்த 30 வயதுடைய பெண்மணியை எனது அண்ணன் திருமணம் செய்தது குறித்தும், அதனை ஊர்சிதம் செய்வதற்காக எனது அண்ணன் வீட்டிற்கு சென்று பார்த்தது குறித்தும் போலீஸ் விசாரணையில் நான் சொன்னேனா என்றால் இல்லை. அந்த திருநெல்வேலி பெண் மீது சந்தேகம் இருப்பதாக போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை.

திருநெல்வேலியை சேர்ந்த அந்த பெண்ணிற்கு எனது அண்ணன் 10 பவுன் தங்க நகைகள் போட்டிருந்தார் என்றும், அந்த பெண்மணி எனது அண்ணனுக்கு மது வாங்கி கொடுத்து அவர் மது போதையில் இருந்தபோது அவரை அடித்து கொன்றுவிட்டு நகைகள் மற்றும் பணத்தை அவர் கொள்ளையடித்து சென்றுவிட்டார் என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் தவறு. 12-08-2019ம் தேதி இரவில் அய்யோ காப்பற்றுங்கள் என்று எனது அண்ணன் சத்தம்போட்டதாகவோ அல்லது அந்த சமயத்தில அசபாவிதங்கள் எதுவும் நடந்ததாகவோ அல்லது வேறு ஆட்கள் நடமாட்டம் இருந்ததாகவோ யாரும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>2, 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது அண்ணன் குடியிருந்து வந்த பகுதியில் எனக்கு பழக்கமான நபர்கள் நிறைய பேர் உள்ளார்கள். அந்த நண்பர்களின் பெயர்கள் சொல்லமுடியுமா என்றால் ஆனந்த், துரைசாமி, சுப்ரமணி, ரவி ஆகியேர்கள் பெயர்கள் மட்டும் ஞாபகம் உள்ளது. இவர்களுடன் போனில் பேசும் அளவிற்கு எனக்கு பழக்கவழக்கங்கள் உள்ளதா என்றால் உள்ளது. EBல் இருந்து ரிட்டேரான ஒரு நபர் தான் எனக்கு தகவல் செல்போன் மூலம் தகவல் சொன்னார், அவரது பெயர் எனக்கு தெரியாது. அவரது செல்போன் நெம்பரை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை, நானும் கொடுக்கவில்லை. போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள், பிரேத விசாரணை அறிக்கையா என்று டென்சனில் தெரியவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் வைத்து தான் போலீசார் கையொப்பம் வாங்கினார்கள். கையொப்பம் போடுவதற்கு முன்பு படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் என்ன தகவல் இருந்தது என்றால் பிரேதம் எவ்வாறு கிடந்தது, என்னென்ன காயங்கள் இருந்தது என்ற தகவல் இருந்தது. மதியம் சுமார் 1 மணியளவில் அந்த அறிக்கையில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் எனது அண்ணன் வீட்டிற்கு சென்று பிரேதம் போஸ்மார்டத்திற்கு எடுத்து செல்லும் வரையில் அங்கு இருந்தேன், இடையில் ஒரு முறை மட்டும் எனது வீட்டிற்கு சென்று எனது அம்மாவை அழைத்து வந்தேன். போஸ்மார்டம் செய்தவற்காக பிரேதத்தை வீட்டில் இருந்து எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்றால் சுமார் மதியம் 1.30 முதல் 2.00 மணி இருக்கும். எனது அண்ணி முத்துலட்சுமி புகார் கொடுக்க சென்றபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. 17-09-2019ம் தேதியில் போலீசார் என்னிடம் செல்போன் காட்டிய சமயத்தில் வேறு என்னென்ன சொன்னார்கள் என்றால் முத்துகுமார் என்பவர் தான் 4 நபர்களுடன் சேர்ந்து கொலை செய்தார் என்றும், முத்துகுமார் மட்டும் தப்பி ஓடி கோர்ட்டில் சரண்டராகிவிட்டார் என்றும், அவரை பிடித்து கேட்டதில் முத்துகுமார் செல்போனை எடுத்து கொடுத்தார் என்றும்

சொன்னார்கள். 17-09-2019ம் தேதியில் தான் வழக்கு எதிரிகள் தான் குற்றவாளிகள் என்று போலீசார் சொன்னார்களா என்றால் கொலை நடந்து 2, 3 நாட்கள் கழித்து எதிரிகளை கைது செய்த பின்பு போலீசார் சொன்னார்கள். எனது அண்ணனை அடிக்கடி சந்திக்கும் பழக்கம் எனக்கு உள்ளதா என்றால் எனது அம்மா என்னுடன் இருப்பதால் எனது அண்ணன் எனது வீட்டிற்கு வந்துபோவார். நான் சென்று பார்த்தபோது எனது அண்ணன் திருநெல்வேலியை சேர்ந்த அந்த பெண்ணுடன் வசித்து வந்தார் என்றும், எனது அண்ணன் அந்த பெண்ணுடன் வசித்து வந்து எனக்கு தெரியும் என்றும் சொன்னால் தவறு. எனது அண்ணனின் இறப்பு சம்பந்தமாக முழு விபரமும் எனக்கு தெரியாது என்றும், காவல் துறையினரின் வற்புறுத்தாலும், அச்சுறுத்ததாலும் தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் தவறு.

1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2, 4 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 3ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது. 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 5ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தது பதிவு செய்யப்படுகிறது.
<u>அரசு தரப்பு மறு விசாரணை</u> – இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

II Addl. Sessions Judge, Erode.